# ப்ரார்த்தனா

Savitri
BHAVAN

ப்ரார்த்தனா அச்சிட்டு வெளியிடுபவர் : சாவித்ரி பவன், ஆரோவில்

**சாவித்ரி பவன்**
ஆரோவில் 605 101
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி: 0091 (0)413 2622922
மின்அஞ்சல்: savitribhavan@auroville.org.in
www.auroville.org/index/savitribhavan.htm

இப்புத்தகத்தில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்கள், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாசகங்கள் மறுபதிப்பு செய்ய அனுமதித்த ஸ்ரீ அரபிந்தோ ஆசிரம் அறக்கட்டளை மற்றும் அறங்காவலர் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றி

*ஆங்கில இதழாசிரியர் ஷ்ரத்தாவன்*
*தமிழில் சுந்தரவல்லி சாய்மோகன், சாவித்ரி பவனுக்காக*

*வடிவமைப்பு : ப்ரிஸ்மா, ஆரோவில்,* prisma@auroville.org.in

*அச்சிட்டோர் : ஆல் இந்தியா பிரஸ், பாண்டிச்சேரி*

# பொருள்ளடக்கம்

சாவித்ரி பரம்பரை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 4
– டாக்டர் பிரேமா நந்தகுமார்

சாவித்ரியின் தோற்றம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 14
– டாக்டர் நட்கர்ணி

வாழ்வின் அடிப்படைத் தத்துவங்கள் . . . . . . . . . . . . . . . . . . 30
– ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை

சாவித்ரி பவன் – செய்தியும், புகைப்படமும் . . . . . . . . . . . . . 33



*A Mother-wisdom works in Nature's breast*
*To pour delight on the heart of toil and want*
*And press perfection on life's stumbling powers,*
*Impose heaven-sentience on the obscure abyss*
*And make dumb Matter conscious of its God.*
*Although our fallen minds forget to climb,*
*Although our human stuff resists or breaks,*
*She keeps her will that hopes to divinise clay;*
*Failure cannot repress, defeat o'erthrow;*
*Time cannot weary her nor the Void subdue,*
*The ages have not made her passion less;*
*No victory she admits of Death or Fate.*
*Always she drives the soul to new attempt;*
*Always her magical infinitude*
*Forces to aspire the inert brute elements; . . .*
*Once more that Will put on an earthly shape.*

(Savitri p. 353-54)

எப்பொழுதும் கடுமையாய் உழைத்துக் கொண்டு ஏங்கித் தவிக்கும் இயற்கைத் தாயின் இதயத்தில் பேரின்பத்தைப் பொழிவதற்கு ஞான விஸ்வேஸ்வரி அன்னை பணிபுரிகிறாள்; தடுமாறித் தத்தளிக்கும் வாழ்க்கைச் சக்திகளை தங்கள் பூரணத்தை உணருமாறு வற்புறுத்துகிறாள், இருண்டு கிடக்கும் பாதாளத்தில் சொர்க்கத்தின் உணர்வை சுமத்துகிறாள்.

ஊமையான ஜடம் தன்னுள் உறைந்துள்ள இறைவனை உணரச் செய்கிறாள். தாழ்ந்து விழுந்த மனித மனம் மேலேற மறந்த போதும், மனித குணம் எதிர்த்தாலும் உடைந்தாலும், களிமண் கட்டியைத் தெய்வீகமயமாக்க முடியும் என்று நம்பும் தன் உறுதியை அவள் நிலைகுலையாமல் வைத்திருக்கிறாள்;

அவளைத் தவறுகள் தடுத்து அடக்க முடியாது: தோல்வி முறியடிக்க முடியாது. காலத்தால் அவளை களைப்படையச் செய்ய முடியாது, சூன்யத்தால் அவளைப் பணிய வைக்க முடியாது.

யுகங்கள் பல கடந்தாலும், அது அவளது ஆவேசத்தைக் குறைத்துவிடவில்லை. காலதேவனையோ விதியையோ வெற்றியடைய அவள் அனுமதிக்கவில்லை. சதா சர்வ காலமும் அவள் ஆன்மாவை புதிய முயற்சிகள் எடுக்கச் செய்கிறாள். மாயாஜாலமாகத் தோன்றும் அவளது அனந்தமயமான தன்மை, அசைவும் உணர்வும் அற்ற முரட்டு மூலக்கூறுகளை ஆர்வம் கொள்ள வற்புறுத்துகிறது. ............
மீண்டும் ஒரு முறை அந்தத் திருவுள்ளம் பூவுலகில் வடிவம் எடுத்தது.

# சாவித்ரி பரம்பரை

*பிரேமா நந்தகுமார்*

*மேன்மை பொருந்திய, ஸ்ரீ அரவிந்தோரியன், மாமேதை திருமதி. பிரேமா நந்தகுமார் அவர்கள் டிசம்பர் 14, 2004 அன்று சாவித்ரி பவனின் புதிய கூடத்தில் நமக்களித்த செவி விருந்து, இதோ உங்களுக்கும்.*

*வேத காலத்திலிருந்தே சாவித்ரியின் சக்தி அறியப்பட்டு வந்திருக்கிறது. சவிதா என்று சூரியனுக்கு ஒரு பெயர். சூரியனின் பல ஆற்றல்களை சூரிய சாவித்ரி, பக சாவித்ரி என்றெல்லாம் போற்றியிருக்கிறார்கள். விசுவாமித்திர ரிஷியின் காயத்ரி மந்திரம் சாவித்ரி மந்திரம் என்றும் கூறப்படுவதுண்டு:*

*தத் ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தீயோ யோந ப்ரசோதயாத் என்னும் இவ்வேத மந்திரத்தை மிகத் தெளிவாக சுப்பிரமணிய பாரதியார் மொழி பெயர்த்திருக்கிறார்:*

*செங்கதிர்த் தேவன் சிறந்த லொளியினைத்*
*தேர்கின்றோம் – அவன்*
*எங்க ளறிவினைத் தூண்டி நடத்துக*

*"சாவித்ரியின் சரித்திரம் மஹாபாரதத்தில் மனைவியின் அன்பு மூலம் சாவினை வென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இச்சரித்திரம் படிக்கும் போது, அதில் உள்ள சில எண்ணங்கள் வேத காலத்தில் வழக்கத்திலிருந்த தொன்மங்களாகத் தெரிகின்றன. தெய்வீக உண்மை நிலையினை தன்னுள் ஏற்று, பின் அறியாமை மற்றும் சாவின் பிடியுள் சிக்கியுள்ள ஆன்மாவே சத்தியவான்; சாவித்ரி தெய்வ மொழி, சூரிய புத்திரி, பேருண்மையின் தேவி, இவ்வுலகைக் காப்பாற்றுவதற்காக அவதரித்தவள்; குதிரைகளின் தலைவன் எனும் பொருள் பெரும் அஸ்வபதியே தவத்தின் தலைவன். இத்தவம் என்பது ஆன்மிகச் செயற்பாடுகளின் ஆற்றல்; இந்த ஆற்றலே நம்மை மானுடத்திலிருந்து தெய்வீக நிலைக்கு ஏற்றம் தருவது; மனத்தில்*

பொதிந்துள்ள ஒளிவீசும் சக்திகளின் தலைவன் த்யுமத்ஸேனன். இத்தெய்வீக மனம் இருண்டுவிட்டதால், தெய்வீகக்காட்சியினை இழந்து அதன் மூலம் தனது ஆற்றல்கள் முடக்கப்பட்டுக் கிடக்கிறது. ஆயினும் இவை அனைத்துமே உருவகங்கள் என்று கூறமுடியாது. இப்பாத்திரங்கள் வெற்று உருவகங்கள் அல்ல. இவை அனைத்துமே அவதாரங்கள், உயிர்ப்புள்ள சக்திகளின் உருவங்கள். இவற்றுடன் நாம் இணைந்திருக்க முடியும். இச்சக்திகள் மனித உருவினை ஏற்று மனிதனுக்கு வழிகாட்டி, அவனைச் சாவின் பிடியிலிருந்து தெய்வீக உணர்வினுக்கும் அமரநிலைக்கும் அழைத்துச் செல்லுகின்றன.

இதிலிருந்து சாவித்திரி சரித்திரத்தின் பரம்பரை வேதகாலத்திலிருந்தே துவங்கிவிடுகிறது என்று அறிகிறோம். மஹாபாரதத்தில், வன பருவத்தில், சாமானியருக்கும் புரியும்படி இந்தப் பேராற்றல் படைத்த தொன்மம் வழங்கப்பட்டிருக்கிறது. நாடிழந்து காட்டில் பஞ்சபாண்டவர்களும் திரௌபதியும் வசிக்கிறார்கள். இவர்களைக் காண மார்க்கண்டேய மகரிஷி வருகிறார். தருமர் அவரிடம் பாஞ்சாலி போன்று கஷ்டப்பட்டும் கணவனுக்கு உதவும் ஒரு மாதரசியை அவர் கண்டதுண்டோ என்று கேட்கிறார். அப்படிப்பட்டவர்கள் முன்காலத்தில் இருந்ததுண்டு எனக்கூறி, மகரிஷி சாவித்திரி சரிதத்தையும் தமயந்தியின் கதையையும் சொல்கிறார். வ்யாஸ மஹாபாரதத்தில் ஏழு அத்தியாயங்களில் சொல்லப்படும் சாவித்திரி கதை இணையற்ற கம்பீரத்துடன் விளங்குகிறது.

மாத்ர தேசத்தில் அஸ்வபதி என்றொரு இணையற்ற நல்ல அரசன் இருந்தான் என்று மார்க்கண்டேயர் ஆரம்பிக்கிறார். மக்கள் இல்லாத குறை தீர, சாவித்ரி தேவியை நோக்கி பதினெட்டு ஆண்டுகள் தவமிருந்தான். தேவி பிரசன்னமாகி “ஒளிமிகு பெண்குழந்தை உனக்கு விரைவில் தோன்றுவாள்” என்று வரம் தருகிறாள். அப்படியே, உரிய காலத்தில் ராணி மாளவிக்குக் குழந்தை பிறக்கிறது. சாவித்ரி தேவியின் அருளால் பிறந்த குழந்தை என்பதால் அஸ்வபதி தன் குழந்தைக்கு சாவித்ரி என்று பெயரிடுகிறான்.

சாவித்ரி மிக அழகிய மங்கையாகப் பருவமெய்துகிறாள். தாமரை இதழ்களையொத்த கண்ணழகு கொண்ட அவள் தேஜஸ்ஸுடன் ஒளிர்ந்தாள். அவ்வொளியின் ஆற்றல் காரணமாக ஒரு இளைஞனும் அவளைத் திருமணம் செய்து கொள்ள முன்வரவில்லை.

தாம்து பத்ம பலா சாரீம் ஜ்வலந்தீமிவ தேஜஸா
ந கஸ்சித் வரயாமாஸ தேஜஸா ப்ரதிவாரித:

தந்தை கூறியபடி மணமகனைத்தேடி வெளி இடங்களுக்குச் சென்ற போது சத்தியவானைச் சந்திக்கிறாள். கண்ணிழந்து, நாடிழந்து கானகத்தில் வசிக்கும் த்யுமத்ஸேனனின் மகன் சத்தியவானும் சாவித்ரியும் திருமணம் செய்து கொள்ள நிச்சயிக்கின்றனர். அரண்மனைக்குத் திரும்பிய சாவித்ரி தன் முடிவை பெற்றோருக்குத் தெரிவிக்கிறாள். அங்கு இருந்த நாரத மகரிஷி சத்தியவானைப் புகழ்கிறார். ஆனால் அவன் இன்னும் ஒராண்டுகாலமே உயிருடன் இருப்பான் என்னும் திடுக்கிடும் தகவலையும் சொல்கிறார். சாவித்ரி மனம் தளரவில்லை. தன் மனத்தை மாற்றிக்கொள்ளும் படி கூறிய தந்தையிடம் ஒரு முறை நிச்சயித்துவிட்ட பின், வேறொருவரை நான் கணவனாக வரிப்பதில்லை என்று கூறிவிடுகிறாள். திருமணம் நடந்தேறுகிறது. சாவித்ரியும் அரச வாழ்வினைத் துறந்து, காட்டில் மாமி, மாமன் மனம் கோணாமல் பணி விடைகள் புரிந்து இனிய இல்லத்தரசியாக விளங்குகிறாள்.

நாரதர் கூறிய கெடுவுக்கு மூன்று தினங்களுக்கு முன் த்ரி–ராத்திரி விரதம் எனும் நோன்பினைச் செய்கிறாள். மவுனமாக, உணவின்றி தியான யோகத்தில் ஈடுபட்டு, முடிவில் ஓமத்தீ வளர்த்து நோன்பினை முடிக்கிறாள். ஆசிரமத்தில் இருந்த பெரியோர்களை வணங்கி ஆசிபெறுகிறாள். கணவனுடன் காட்டிற்குச் செல்கிறாள். கணவன் மரித்த பின், அவனது உயிரை எடுத்துச் செல்லும் எமதர்மன் பின் செல்கிறாள். அவளது ஆற்றலும், இனிய சொற்களும் எமதர்மனை வியப்புறச் செய்கின்றன. த்யுமத்ஸேனனுக்குக் கண்பார்வை, ராஜ்ஜியம் மீளவும், அஸ்வபதிக்கு நூறு மக்கள் தோன்றவும்,

சாவித்ரிக்கு சத்தியவான் மூலம் நூறு மக்களும் (மமாத்மஜம் ஸத்யவதஸ்தௌரஸம், என்றபடி) வரமாகத் தருகின்றான். முடிவில் "பதிவிரதையே! இணையற்ற ஒரு வரம் கேள்" (வரம் வ்ருணீஷ்வ அப்ரதிமம் பதிவ்ரதே) என்று யமதர்மன் கூறவும், சாவித்ரி சத்தியவானின் உயிரைக் கேட்டுப் பெறுகிறாள். எமதர்மனின் ஆசிகளுடன், தம்பதிகள் வீடு திரும்புகின்றனர்.

பல்லாயிரமாண்டுகளாக மகாபாரதத்தின் பகவத் கீதையானது எப்படிச் சிதறாமல் காக்கப்பட்டு வந்துள்ளதோ அதேபோல் சாவித்ரி சரித்திரமும் காக்கப்பட்டு வந்துள்ளது. மத்ஸ்ய புராணத்திலும் சாவித்ரி சரிதம் இதே போல் அற்புதமாகச் சொல்லப்பட்டுள்ளது.

இன்றளவும் அவளது மேன்மை பேசப்படுகிறது. சாவித்ரி விரதம் நாடெங்கும் ஏதோ ஒரு விதத்தில் கொண்டாடப்படுகிறது. கீதையின் செய்யுட்களைப் போல், சாவித்ரி பாத்திரமும் தினையளவும் மாற்றப்படவில்லை. எத்தனையோ நாட்டுப்பாடல்கள், நாடகங்கள். ஆனால் சாவித்ரி சாவித்ரிதான். அவளது மேன்மையும், எந்த ஒரு கொடிய நேரத்திலும் கண்ணீர் சிந்தாத ஆன்ம வீரமும், எளிமையும் அப்படியே சொல்லப்பட்டு வந்துள்ளது என்பது ஒரு பேராச்சரியமே.

எடுத்துக்காட்டாக பல நூறாயிரமாண்டுகளாக வழக்கத்திலுள்ள சாவித்ரி பாடம் எனும் பாடலைக் காண்போம். இது பெண்களால் பெண்களுக்காக உருவானது என்பது தெளிவு. பெண்கள் இவளை பதிவிரதை எனும் நோக்கில் மாத்திரம் பார்க்கவில்லை. அவளது அஞ்சா நெஞ்சம் அவர்களைக் கவர்ந்திருக்கிறது. அதனால் தான் போலும், சகோதரி சுப்புலஷ்மி அம்மாள் இந்நூலை அறுபது ஆண்டுகள் முன்பே அச்சிட்டார்.

சகோதரி சுப்புலட்சுமிக்கு பாலிய விவாகம். அறியாப் பருவத்திலேயே கைம்பெண் ஆனது மேலும் கொடுமை. நல்ல வேளை அவரது தந்தையார் பச்சாதாபத்தினால் வருந்தி சுப்புலஷ்மியைப்

படிக்க வைத்தார். சிறந்த ஆசிரியையாக விளங்கிய சகோதரி, கைம்பெண்களுக்காகவும் கைவிடப்பட்ட பெண்களுக்காகவும் ஒரு சங்கம் நிறுவி, ஆயிரக்கணக்கான பெண்களுக்கு புது வாழ்வு அளித்தார். தனது பெண்கள் தைரியமுடன் வாழ்வதற்காக அவர்களுக்கு பகவத் கீதை, லலிதாம்பாள் சோபனம், சாவித்ரி பாடம் முதலிய நூல்களைப் பதிப்பித்தார். சாவித்ரி நோன்பு (காரடையான் நோன்பு) செய்யும் போது பெண்களால் இப்பாடல் படிக்கப்பட்டு வந்திருக்கிறது. சகோதரி தமது முன்னுரையில் எழுதுகிறார்:

"சாவித்ரியம்மாள் செய்த கௌரி நோன்பாகிய மாசியும் பங்குனியும் கூடும் வேளையிற் செய்யப்படும் இந்த மாசி பங்குனி நோன்பு என்பது நம்முடைய தேசத்தில் எல்லா சுமங்கலிகளாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இதற்கு நைவேத்தியம் காரரிமாவும் காராமணி அல்லது துவரையும் கலந்த அடை என்னும் பணியாரம். இதனால் காரடையான் நோன்பு என்றே இதை விசேஷமாய்ச் சொல்வது வழக்கம். சாவித்ரியம்மன் காட்டில் வசித்துக் கொண்டிருந்ததனால் காரரிசியும் துவரையுந்தான் கிடைத்திருக்கலாம் போலும்."

பெண்களால் பெண்களுக்காகப் பாடப்படும் பாட்டில், பெண் நோக்கு தூக்கியிருக்கிறது. குழந்தை பிறந்த செய்தி கேட்டதும் மகிழ்ந்து மந்திர நீராடி, குழந்தையைப் பார்க்க வருகிறார் மஹாராஜர்:

முத்திழைத்த கோவிலுக்கு மூப்பி என்னும் தாஸியவள்
பட்டுமடிப்பின் மேல் பாலகியைக் கொண்டு வந்து
அஸ்வபதி ராஜா அடிமடியில் வைத்திடவே
(ராஜா) உச்சிமுகந்து உள்ளங்கால் கண்ணிலொற்றி
பொன்னரைத்து நாவிலிட்டார் புத்திரிக்கு அப்பொழுது
ஜாதகர்மம் நாமகர்ணம் செய்து மந்தராஜாவும்
கடுந்தபஸால் வந்திட்ட கட்டழகி தேவியரை
சாவித்ரியம்மனென்று சந்தோஷ மாயழைத்தார்.

பெண்கள் நோக்கினுக்கேற்ப அஸ்வபதி ராஜா எவ்வளவு தேடியும் சாவித்ரிக்கு இணையான மணமகனைக் கண்டு பிடிக்க முடியவில்லை

என்று கவிதை சொல்கிறது. அவரது ஆசியுடன் மணமகனைத் தேடிச் செல்கிறாள் சாவித்ரி:

தேரின் மேல் ஏறி தேசமெல்லாம் ஆராய்ந்து
தேசமெல்லாம் காணாமல் திகைத்து வனத்தில் வந்தாள்
(ஒரு) நந்தவனந்தனிலே ஞாயிருந்தாப் போல்
நல்ல மலரெடுக்கும் நாயகரைக் கண்டவுடன்
புஷ்பம் பறிக்கும் புண்ணியரைக் கண்டவுடன்
இவர் தாம் நமக்கேற்ற இஷ்டபர்த்தா என்றறிந்து
மனதுக்கிசைந்த பர்த்தா வரித்தே திரும்பி வந்தாள்

பாரதத்தில் சத்தியவானும் சாவித்திரியும் வனத்தில் சந்தித்தது சொல்லப்படவில்லை. இப்படி உள்ள நாட்டார் கதைகளிலிருந்து அவர் தனது ஆங்கில மா காவியத்தில் இவ்விருவரும் சந்திக்கும் காதல் காண்டம் (The Book of Love) எழுதியிருக்ககூடும் என்று தோன்றுகிறது. நாரதர் கூறியதனால் சாவித்ரி மனம் கலங்கவில்லை, வேறு மணாளனையும் தேடவில்லை.

பதிவிரதையாவார்கள் பர்த்தா வரித்தபின்பு
பல புருஷர் தேடுவரோ பதிவிரதா பங்கமன்றோ
அழகற்றானானாலும் அதி மூடனானாலும்
அந்தமில்லானானாலும் ஆயுளில்லானானாலும்
அவரே எனக்கிசைந்த இஷ்டபர்த்தா என்றுரைத்தாள்

திருமணம் விமரிசையாக நடக்கிறது. பெண்கள் உலகில் நடத்தும் திருமணம் அல்லவா? ரசமான வர்ணனைகள். மணமகள் அலங்காரம் பாருங்கள்:

பச்சை மஞ்சள் பூசி பைங்கிளிக்கு நீராட்டி
அற்புதமாம் சுந்தரிக்கு அலங்காரம் செய்தார்கள்
பரந்ததொரு நெற்றியிலே பொட்டுமிட்டாள் மையுமிட்டாள்
கொத்ஸூ வைத்துப் பின்னி குழல் வாரிப்பூ முடித்து

குப்பியிற் பன்னீரும் குளிர்ந்திருக்கும் சந்தனமும்
சிற்றிடையாள் சாவித்ரி தேகத்திற் பூசிவிட்டாள்

பரதேசிக்கோலம், ஊஞ்சல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல் என ஒன்றுவிடாமல் நடக்கிறது. திருமணம் முடிந்த கையோடு அஸ்வபதியும் சாவித்ரியின் பிறந்தகத்தைச் சேர்ந்த மற்றோரும் மாத்ரதேசம் திரும்பிவிடுகிறார்கள். வ்யாசர் கூறுவதுபோல் சாவித்ரி தன் பட்டாடைகளைத் துறந்து எளிய மரவுரி தரித்து இனிய இல்லறம் நடத்துகிறாள். த்ரி–ராத்திரி விரதமும் நடத்துகிறாள் :

பார்வதி தேவியை நோக்கித் தவமிருந்தாள் பாவையரும்
மூன்று நாள் மௌனவிரதம் இருந்து குழலாள் தானிருந்து
உபவாசமாக விருந்தாளே உத்தமியாள்

காட்டில் சத்தியவான் உயிரை எமதர்மன் எடுத்துக்கொண்டு செல்கிறான். பெண்களுக்கே இயல்பான ஜாக்கிரதையுடன் சத்தியவான் உடலை சாவித்ரி பத்திரப்படுத்தியதாக கவிதை கூறுகிறது:
சாவித்ரியம்மன் சரேலென்று தானெழுந்து
பஷி மிருகந்தீண்டாது பர்த்தாவை ரஷை பண்ணி
தழைத்தமரம் வளைத்து தழையொடித்து மேல் மூடி
கிளையின் இலை பறித்துக் கணவரை மூடிவைத்து
பின்னே நடந்தாளே பொற்கொடியும் தருமருடன்

இருவருக்கும் சம்பாஷணை நடக்கிறது. எமதர்மன் பரிவுடன் பேசுகிறான். சாவித்ரி மரியாதை தவறாமல், பயமின்றி நல்வார்த்தைகள் சொல்கிறாள். எமதர்மனும் வரங்கள் தருகிறான்:

தர்க்கங்கள் சாஸ்திரங்கள் சகலமும் கற்றாலும்
உன்னைப்போல் ஸ்தோத்திரங்கள் பண்ணார் ஒருவர்களும்
உன்னுடைய ஸ்தோத்திரத்தால் (என்) உள்ளம் குளிர்ந்ததம்மா
மஹாபாரதத்தில் உள்ள கதைகளிலெல்லாம் சிறந்த கதை இதுவே என்று பாடம் முடிகிறது:

*மார்க்கண்டேயர் உரைக்க மன மகிழ்ந்து பாண்டவர்கள்*
*ஆச்சரிய மிகுந்த அருங்கதையைக் கேட்டுமவாள்*
*அம்மன் மகத்துவத்தைக் கேட்டு மனங்குளிர்ந்து*
*சாவித்ரி தேவியரைச் சிந்தைபண்ணியே ஸ்துதித்தாள்*
*ஒத்திசைத்த கெம்புடனே ஒளிமுத்துக் கோர்த்தாற்போல்*
*சித்திரமாம் பாரதத்தின் நடுவிருக்கும் சற்கதையை*
*கற்றவரும் கேட்டவரும் கற்றுக்கொடுத்தவரும்*
*சாவித்திரியம்மைனைப்போற் சந்தோஷமாயிருப்பாள்*

*வியாசரது சாவித்ரி போல் இந்த நாட்டார் பாடல் சாவித்திரியும் கண்ணீர் சிந்தவில்லை. இதிலிருந்து காலம் காலமாக சாவித்ரியின் பாத்திரம் பெண்களுக்கு உறுதுணையாக இருந்து வந்திருப்பது கண் கூடு.*

*ஆங்கிலப்படிப்பு வந்தபின், ஆங்கில இலக்கியத் தாக்கத்தினால் இந்தியர் ஆங்கிலத்தில் இலக்கியம் படைக்க வாரம்பித்தனர். தோரு தத் எனும் வங்கப் பெண்மணி பிறப்பால் கிருஸ்துவர் ஆயினும், சாவித்ரி சரித்திரத்தை மிகவும் சிறப்பாக, ஐந்து காண்டங்களில் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். இளம் பெண் எழுதிய கவிதை என்பதால் கற்பனை நவிற்சி (*romanticism*) விரவிய நூல். வியாசபாரதப் போக்கிலேயே கதை செல்லுகிறது. எமதூதர்கள் தங்களால் சத்தியவானின் உயிரைக் கவரமுடியவில்லை, ஏனெனில் மயங்கிக்கிடக்கும் சத்தியவான் அருகே, கண்ணீர் சிந்தாமல் ஒரு தெய்வீகப் பெண் உட்கார்ந்திருக்கிறாள், தன்னை முற்றிலும் உணர்ந்தவளாக இருக்கிறாள், அண்டுவதற்கு பயமாக இருக்கிறது என்றார்களாம்:*

*We left her leaning on her hand.*
*Thoughful: no tear-drop had she shed,*
*But looked the goddess of the land,*
*With her meek air of self-command.*

*இப்படி பல்லாயிரமாண்டுகளாக வளர்ந்துவரும் சாவித்ரி பரம்பரைக்கு அண்மையில் கிடைத்த தெய்வீக வரவு ஸ்ரீ அரவிந்தாின் மா காவியமாகும். வேதத்தில் உள்ள தொன்மங்கள், பாரதம், மத்ஸ்ய புராணம், நாட்டார் பாடல், ஆங்கிலக்கவிதைகள் என அனைத்தையும் உள்வாங்கிக் கொண்டு, பூர்ண யோகத்திற்கு வழிகாட்டியாக, சாவித்ரி பரம்பரையிலிருந்து வழுவாது சாவித்ரி பாத்திரத்தை ஸ்ரீ அரவிந்தர் படைத்திருக்கிறார். நாம் அனைவருமே படித்து,புாிந்து கொண்டு, தியானம் செய்து, நெஞ்சில் ஒவ்வொரு கணமும் மறவாது வணங்க வேண்டிய பாத்திரம், ஸ்ரீ அரவிந்தாின் சாவித்ாி. இதுவே நாம் செய்யவேண்டிய யோகம் சாவித்ாி தியானமும், சாவித்ாி மாகாவியத்தைப் படிப்பதும் நம்மை மானிடத்திலிருந்து தெய்வீகத்திற்கு இட்டுச்செல்லும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இக்காவியத்தின் வேர்கள் வேத மூலம். இக்காவியமோ வருங்காலத்தினை ஒளிர்விக்கும் தீபம். சாவித்ாி பற்றி எழுதும் போதெல்லாம் ஸ்ரீ அரவிந்தாின் எழுதுகோல் வேத மந்திரம் போலவே ஒலிக்கிறது. சாவித்ாி பரம்பொருளின் அவதாரம் என்பதைக் காட்டும் சில வாிகள்:*

*அவளுள் குடிகொண்ட அனைத்துத் தகைமைகளும்*
*அவளது தனிப்பெரும்பிறவியைக் குறித்தன.*

*பூமியின் வியாபகத்திற்கு அண்மையிலும்,*
*சுவர்க்கத்துடன் தான் கொண்ட அந்நியோந்நியத்துடனும்*
*இலங்கி விளங்கிய, வழுமிய, விடைப்பட்ட, இளமை ததும்பும்*
*அவளுடைய பெருவிழிப்பார்வை கொண்ட ஜீவனானது*
*சீர்ச்சுடரும், பேரமைதியும் கோலோச்சும் உலகங்களினூடே*
*உட்பயணம் செய்தது மாலுமித்தது.*

(Savitri, p. 14)

*பரம்பொருளின் சொரூபமாயினும். சாவித்ாி மானுடப்பெண்மணியாக, மனிதர்களிடம் பெருங்கருணையுடன் தோன்றினாள் என்று அவளது சௌலப்பியத்தையும் ஸ்ரீ அரவிந்தர் எடுத்துக்காட்டுகிறார்:*

*அவள் கருணையின் வாரி,*
*அவள் ஒரு பொலிவுற்ற புனித சரணாலயம்,*
*அவளுடைய உள்ளார்ந்த உதவியுடன் விண்ணுலகக் கதவையும் திறக்க முடியும்.*
*அவளுடைய அன்பு – அளப்பரியது.*
*அது –*
*பிரபஞ்சத்தின் வியாபகத்தைவிடப் பெரியது.*
*தன்னுடைய உள்ளத்தில்,*
*உலகம் முழுவதற்குமே தஞ்சம் கொடுத்து தாலாட்டி*
*உறங்கச் செய்யும்*
*ஆற்றல் தோய்ந்த வாத்சல்யம் – அவளிடம் இருந்தது.*

*புற வாழ்வில் மிகுதியான சவால்களைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். நமது அக வாழ்வினுக்குள் சாவித்ரியின் ஆற்றல் எனும் ஒளியைப்பாய்ச்சினால், அதன் காரணமாக புறவாழ்வும் மலர்ச்சி பெற்று மண்ணில் விண் சமைக்கலாம் என்பது உறுதி.*



*14–12–2004 அன்று சாவித்ரி பவனில் டாக்டர் பிரேமா நந்தகுமார் அவர்கள்*

## சாவித்ரியின் தோற்றம்

ஒரு சுருக்கமான அறிமுகம்
(நான்கு கட்ட விரிவுரை)
பகுதி இரண்டு

ஆங்கிலம் டாக்டர் மங்கேஷ் நடகர்னி

வெளியீடு ஸ்ரீஅரபிந்தோ சொஸைட்டி, பாண்டிச்சேரி.

(Advent)

ஸ்ரீஅரவிந்தர் சாவித்ரிக்குக் கொடுத்த துணைத் தலைப்பு 'புராணமும் குறியீடும்' ஆகும். புராணக்கதை மஹாபாரதத்தில் 700 வரிகளில் ஏழு அத்தியாயங்களில் அடங்கிவிட்டது. மஹாபாரதத்தில் உள்ள இந்த உபகதை ஸ்ரீஅரவிந்தரின் கரங்களில் பிரபஞ்சக் காவியமாக மாறிவிட்டது. மேலும் ஆங்கில மொழியிலேயே மிக நீளமான கவிதை எனவும் பெயர் பெற்றது. 24000 வரிகள், 49 அத்தியாயங்களாய் பிரிக்கப்பட்டு, 12 புத்தகங்களாய் உருவெடுத்தது. புராணக்கதையைவிட கிட்டத்தட்ட 35 மடங்கு பெரியதாக இருந்தது. ஸ்ரீஅரவிந்தருக்கு இவ்வளவு பெரிய திரைச் சீலை ஏன் தேவைப்பட்டது ? புதிய தகவல்களைச் சேர்த்து மூலக் கதையை மாற்றியுள்ளாரா ? இல்லை. கதையில் மனித வரலாற்றைக் குறிக்கும் முக்கிய வரிகள் கிட்டத்தட்ட அப்படியேதானிருந்தன. ஸ்ரீஅரவிந்தர் இந்த எளிய புராணக்கதையை, பிரபஞ்சத்தின் தனிப் பெரும் சிறப்பை உணர்த்தும் குறியீடாய் உருமாற்றியிருக்கிறார். இதனாலேயே அவருக்கு இவ்வளவு பெரிய திரைச் சீலை தேவைப்பட்டது. இது எவ்வாறு செயல் வடிவம் பெற்றது என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம். அவ்வாறு நோக்கும்போது காவியம் முழுவதையும் ஒரு பொதுவான கண்ணோட்டத்தில் அறிந்து கொள்ள முடியும்.

மஹாபாரதக் கதையில் வரும் அஸ்வபதி மத்ரா நாட்டு அரசன். மிகுந்த தவச்சீலரும், பெருந்தன்மையும் உடையவர். பிள்ளைச் செல்வத்தைத் தவிர மற்ற எல்லாச் செல்வங்களும் நிரம்பப்

பெற்றவர். சந்ததி வேண்டி 18 வருடங்கள் கடுமையான தவத்தை மேற்கொள்கிறார். தவத்தின் இறுதியில் சாவித்ரி தேவி ப்ரசன்னமாகி வரம் அளிக்கிறாள். விரைவில் அவருக்கு ஒரு மகள் பிறப்பாள் என்று தேவி வாக்குறுதி அளிக்கிறாள். இவை அனைத்தும் மஹாபாரதத்தில் 10 வரிகளில் அடங்கியுள்ளன.

ஸ்ரீஅரவிந்தரின் காவியத்தில் இந்த விஷயம் 10,000 வரிகளில் 22 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. எந்த விதத்தில் அது கிட்டத்தட்ட ஆயிரம் மடங்கு விரிவாகி இருக்கிறது ? ஸ்ரீஅரவிந்தரின் அஸ்வபதி மஹாபாரதக் கதையில் வரும் அஸ்வபதியைப்போல், தனக்காக, சந்ததி வரம் வேண்டி தவம் புரியும் சாதாரண அஸ்வபதியாக இல்லை. மாறாக அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும், மனித குலத்தின் ஆன்மீகப் பிரதிநிதியாகவும், மனித குலத்திற்கு மகிழ்ச்சி அளிக்க வந்தவராகவும் இருக்கிறார். அஸ்வபதிக்குள்ளும் நிச்சயமாக ஒரு தேடல் இருந்தது. அது தனக்காக மட்டுமில்லாமல் மனிதனை அவனுடைய துயரங்கள், அதிருப்திகள், உலகின் தீமைகள் இவற்றிலிருந்து விடுவிக்கக் கூடியதும், இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கக்கூடியதுமான புதியதான ஒன்றைக் கண்டறிய வேண்டும் என்ற தேடலாக இருந்தது. புதிய ஒன்றைப் படைக்கவே அவர் கடுந்தவத்தை மேற்கொள்கிறார். இந்தக் கருத்து உலகிற்குப் புதுமையான ஒன்று. சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள், புரட்சிக்காரர்கள், ஏன் அவதாரங்களின் திருஷ்டியிலும் கூட சிக்காமல் மறைந்திருந்த இந்தப் புதிய கண்ணோட்டத்தை தன் கடுமையான தவத்தின் மூலம் கண்டறிந்தவர் அஸ்வபதியே ஆகும். அவர் தன் தவத்தின் மூலமாக கிழக்கிற்கும், மேற்கிற்கும் அதாவது உலகம் முழுமைக்கும் வழங்கக்கூடிய அறிவையும் ஞானத்தையும் அடைந்தார்.

மேலும் விஞ்ஞானமோ, தொழில் நுட்பமோ, மதமோ, கலையோ இவை எதுவும் இன்று வரை மனிதனை அவனுடைய துயரங்களிலிருந்து விடுவிக்கவில்லை என்பதை மிகுந்த மனவேதனையோடு உணர்கிறார். இவை எதுவும் அவனை விடுவிக்க நிச்சயமாய் வழி செய்யாது, அவற்றால் செய்ய முடியாது என்பதை அஸ்வபதி மிகுந்த துயரத்தோடு உணர்கிறார். காலம் காலமாக மனிதன் கடவுளுக்கும்,

ஒளிக்கும், சுதந்திரத்திற்கும், அமரத்துவத்திற்கும் பேரார்வம் கொண்டுள்ளான். அவனுடைய தணியாத தாகம் என்றாவது இந்தப் பூமியில் தீருமா ?

ஒரு யோகியாக ஸ்ரீஅரவிந்தரின் சொந்தத்தேடலும் இதுவாகவே இருந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அஸ்வபதியின் யோகம் என்று குறிப்பிடப்பட்டுள்ள இந்த 22 அத்தியாயங்களும் உண்மையிலேயே ஸ்ரீஅரவிந்தரின் தவமாகும். மனிதனுக்கு பூமியிலேயே மலர்ந்த சந்தோஷமான வாழ்வைக் கொடுப்பதற்காக, அவனுடைய உணர்வு நிலையையே முற்றிலுமாக மாற்றக்கூடிய இரகசியத்தை அவர் கண்டறிந்து வெல்ல விரும்புகிறார்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஸ்ரீஅரவிந்தரின் அஸ்வபதி கடுமையான தவத்தை மேற்கொள்கிறார். அது அஸ்வபதியின் யோகம் என்ற தலைப்பில் இருக்கிறது. அரசனின் யோகம் மூன்று வெவ்வேறு நிலைகளில் விவரிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் அஸ்வபதி தன் உடல், உணர்வு, மனம் இவற்றிலிருந்து ஆன்ம விடுதலை பெற்று ஆன்மீகப் பூரணத்துவம் அடைகிறார். இரண்டாம் கட்டத்தில், அது இரண்டாம் புத்தகமாக "உலகங்களில் பயணிப்பவர்" என்ற தலைப்பில் உலக அடுக்குகளைப்பற்றி விவரிக்கிறது. இங்கே அஸ்வபதி ஜடப் பகுதியிலிருந்து மனப் பகுதிக்கும், பின்னர் அதையும் கடந்து மேலும் உள்ள பல உலக அடுக்குகளுக்கும் செல்கிறார். இவர் தவத்தின் தந்தை, ஆனால் இப்பொழுது இந்த யாத்திரையை அவர் அவ்வாறு செய்யவில்லை. உலக மக்களின் பிரதிநிதியாக இந்த உலகங்களுக்குச் செல்கிறார். இந்த யாத்திரையில் அவர் பல உணர்வு தளங்களைக் கண்டறிவதோடு, மனிதன் இவற்றை எப்படி தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பதையும் அறிகிறார். இந்த யாத்திரையில் அஸ்வபதி மேலும் பல உண்மைகளைக் கண்டறிகிறார்.

இறைவனே மனித இயல்பாய் பூமியில் தம்மை வெளிப்படுத்துகிறார் என்ற பேருண்மையை அறிகிறார். மேலும் மனித வாழ்க்கையின் நோக்கமே இந்த மனித இயல்பு, தெய்வீக இயல்பாய் வாழ்க்கையில்

மாற வேண்டும் என்பதே என்ற உண்மையையும் அறிகிறார். ஆனால் மனிதனால் மட்டும் இதைச் செய்ய இயலாது என்பதையும் கண்டறிகிறார். இவற்றைத் தவிர, மனிதன் வாழ்வையும் உடலையும் உதறிவிட்டு ஆன்மீகத்தை பூரணமாக மேற்கொண்டாலோ, அல்லது ஆன்மீகத்தை மறுத்து விஞ்ஞானம் மற்றும் பிறவற்றை ஏற்றுக்கொள்வதாலோ தன் துயரங்களிலிருந்து விடுதலை அடையப்போவதில்லை என்பதையும் அறிகிறார். இவை எதிலும் அவன் தேடுவது அவனுக்குக் கிடைக்காது என்பதை உறுதியாய் அறிகிறார். உலகை அடித்தளமாகக் கொண்டு புதியதான ஒன்று உண்டாக்கப்படவேண்டும். அந்தப் புதியது மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்க வேண்டும். மனிதன் தன் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி, இன்றைய தன்னுடைய சாதாரண உணர்வு நிலையை உயர்ந்த சத்திய ஜீவிய உணர்வு நிலைக்கு மாற்ற முயற்சி எடுக்க வேண்டும் என்பதே. அது ஒன்றே அவனுக்கு பூமியில் வளமான வாழ்வைக் கொடுக்க முடியும் என்றும் அறிகிறார். மேலிருந்து மாபெரும் சக்தி ஒன்று பூமிக்கு இறங்கிவந்து மனிதனுக்கு உதவினாலொழிய மனிதனால் இதைச் செய்ய முடியாது என்பதை நன்கு உணர்ந்து, அந்த மாபெரும் சக்தியை புவிக்குக் கொண்டு வருவதற்காக சாதனையை மேற்கொள்கிறார். சாதனையின் இறுதியில் சாதனை நிறைவேறியதற்கு அடையாளமாக தெய்வீக அன்னையின் வாக்குறுதியை வரமாகப் பெறுகிறார்.

அவர் இப்பொழுது தன் யாத்திரையின் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டார். அங்கே அவருக்கு தெய்வீக அன்னை காட்சி தருகிறார். தெய்வீக அன்னை அஸ்வபதியிடம் அவருடைய தவத்தின் மூலமாக அவருக்குக் கிடைத்த ஆன்மீகப் பேரின்பங்களைப் பெற்றுக் கொண்டு பூமிக்குத் திரும்பும்படி வற்புறுத்துகிறாள். ஆனால் அஸ்வபதி தெய்வீக அன்னை தனக்குக் கொடுத்தவற்றை, உலகிற்கும், மனித குலத்திற்கும் தருமாறு வேண்டுகிறார். அப்பொழுது தெய்வீக அன்னை, பூவுலகில் தெய்வீக வாழ்க்கை என்பது மிகவும் பாக்கியமான சிறந்த ஒன்று, இந்த மிகச் சிறந்ததை ஏற்கும் பாங்கு மனிதனிடம் இல்லை, இதை ஏற்கவும் அவன் தயாராக

இல்லை, ஆதலால் மனித குலத்திற்காக எதுவும் பிரார்த்திக்க வேண்டாம் என்கிறாள். உலகமும் பேருண்மையைத் தாங்கும் நிலையில் இல்லை என்கிறாள்.

*Man is too weak to bear the Infinite's weight*
*Truth born too soon might breake the imperfect earth.*

*(p.335)*

ஆகவே அஸ்வபதி தனக்குக் கிடைத்தவைகளில் சிறிதும் நாட்டம் காட்டவில்லை. அவர் மனித குலத்தின் பிரதிநிதியாக இந்த யாத்திரையை மேற்கொண்டிருந்ததால், மனித குலத்திற்காகவே வேண்டுகிறார். ஆண்டாண்டு காலமாய் மனிதனின் முடிவுறாத தேடலையும், பலனில்லாத போராட்டத்தையும் அதன் கடுமையையும் தன் துயரம் போல் உணர்ந்து மிகுந்த மனவேதனை அடைகிறார். தன் தவத்தின் பலனாய் தெய்வீக அன்னை தனக்கு மட்டும் அளித்தவற்றை முற்றிலுமாய் நிராகரித்து பூமிக்கு இறங்கி வந்து மனிதனுக்கு உதவுமாறு தெய்வீக அன்னையிடம் மன்றாடுகிறார், இறைஞ்சி வேண்டுகிறார். துயரமான மனித வாழ்க்கையில் அருளாக வந்து உதவ வேண்டும் என்று முறையிடுகிறார்.

அஸ்வபதியின் தீவிரமான முறையீடு இறுதியில் வெற்றி அடைகிறது. மனமிரங்கிய தெய்வீக அன்னை தெய்வீக அருளாக பூவுலகிற்கு வருவதாக வாக்குறுதி அளிக்கிறாள். தெய்வீக அன்னையின் அருள் உலகில் செயல்பட்டு இயற்கைக்கு எதிராக உள்ளவற்றை எல்லாம் மாற்றும் என்றும் வாக்குறுதி அளிக்கிறாள். இந்த வாக்குறுதியைப் பெற்றுக்கொண்ட பிறகே அஸ்வபதி பூமிக்குத் திரும்பி வருகிறார். இதோ தெய்வீக அன்னையின் வாக்குகளை சாவித்ரியில் பார்ப்போமாக :

*O strong forerunner, I have heard thy cry.*
*One shall decend and break the iron Law,*
*Change Nature's doom by the lone Spirit's power.*

*A limitless Mind that can contain the world,*
*A sweet and violent heart of ardent calms*
*Moved by the passions of the gods shall come.*
*All mights and greatnesses shall join in her;*
*Beauty shall walk celestial on the earth,*
*Delight shall sleep in the cloud-net of her hair*
*And in her body as on his homing tree*
*Immortal Love shall beat his glorious wings.*
*A music of griefless things shall weave her charm;*
*The harps of the Perfect shall attune her voice,*
*The streams of Heaven shall murmur in her laugh,*
*Her lips shall be the honeycombs of God,*
*Her limbs his golden jars of ecstasy,*
*Her breasts the rapture- flowers of  Paradise.*
*She shall bear Wisdom in her voiceless bosom,*
*Strength shall be with her like a conqueror's sword*
*And from her eyes the Eternal's bliss shall gaze.*
*A seed shall be sown in Death's tremendous hour,*
*A branch of heaven transplant to human soil;*
*Nature shall overleap her mortal step;*
*Fate shall be changed by an unchanging will.*

*(p. 346)*

இத்துடன் மூன்றாம் புத்தகம் நிறைவடைகிறது. முதல் மூன்று புத்தகங்களில் 24 அத்தியாயங்கள் இருக்கின்றன. இவற்றில் 22 அத்தியாயங்கள் அஸ்வபதியின் யோகத்தைச் சொல்கின்றன. சாவித்ரி காவியத்தில் ஸ்ரீஅரவிந்தர் மேற்கத்திய இலக்கியப் பாணியைக் கடைப்பிடிக்கிறார். கதை, முதலில் இருந்து ஆரம்பிக்காமல் இடையில், அதாவது சத்தியவானின் மரணம் விதிக்கப்பட்ட தினத்தின் வைகறையிலிருந்து ஆரம்பிக்கிறது. இது புத்தகம் ஒன்றின் முதல் இரண்டு அத்தியாயங்களில் வருகிறது.

முதல் புத்தகத்தின் 3,4,5 அத்தியாயங்கள் அஸ்வபதியின் ஆன்ம விடுதலையைக் கூறுகிறது. சாவித்ரி காவியத்திலேயே இரண்டாம் புத்தகம்தான் மிக அதிக அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. மொத்தம் 15 அத்தியாயங்கள் இதில் இருக்கின்றன. இவை அஸ்வபதி பல்வேறு உணர்வு தளங்களையும் கண்டறிவதாக இருக்கிறது. புத்தகம் மூன்றில் நான்கு அத்தியாயங்கள் உள்ளன. புத்தகம் மூன்றும் கூட அஸ்வபதி சிருஷ்டி இரகசியத்தை அறிவதும், தெய்வீக அன்னையின் வாக்கை வரமாகப் பெறுவதுமான அஸ்வபதியின் யோகமாக இருக்கிறது. இப்பொழுது நாம் கேட்ட தெய்வீக அன்னையின் வார்த்தைகள், அஸ்வபதியின் பேரார்வத்திற்கு – பூமியில் மனிதனின் பூரணமான வாழ்விற்கு தெய்வீக அன்னை பதித்த முத்திரையாக அமைந்துள்ளன.

புத்தகம் நான்கில் 4 அத்தியாயங்கள் உள்ளன. இது சாவித்ரியின் பிறப்பு, இளமைப்பருவம் இவற்றுடன் ஆரம்பிக்கின்றது. சாவித்ரி மிக அழகான இள நங்கையாக இருப்பதையும், பல கலைகளிலும் வல்லவளாய் இருப்பதையும், கைவேலைகளில் தேர்ச்சி பெற்று இருப்பதையும், கல்வி, கேள்விகளில் தேர்ச்சி பெற்று அறிவு நிரம்பியவளாய் இருப்பதையும் வர்ணிக்கிறது. சாவித்ரியின் தெய்வீகப்பொலிவை எப்படி நாம் உணர முடிகிறதோ, அது போல அவளுக்குள் கொழுந்துவிட்டெரியும் சுடரின் தீவிரத்தையும் நம்மால் அறியமுடிகிறது. அவளது தந்தை அவளை மிகவும் நேசித்தது இயற்கையே. ஒரு நாள் அஸ்வபதிக்குள்ளிருந்து, ஒரு குரல் அவருக்கு சாவித்ரியின் உயரிய விதியையும், அவளது பிறப்பின் நோக்கத்தையும், அவள் வாழ்க்கையில் சந்திக்க வேண்டியவைகளைப் பற்றியும் நினைப்பூட்டுகிறது. ஆகையால் அஸ்வபதி சாவித்ரியை அவளுடைய விதியை சந்திப்பதற்கும், அவளுக்காகக் காத்திருக்கும் அவளுடைய மணாளனைக் கண்டுபிடிப்பதற்கும் உலகெங்கும் சுற்றித் தேட அனுப்பிவைக்கிறார். சாவித்ரி தன் தேடலைத் தொடங்குகிறாள். நாம் இப்பொழுது "அன்பின் புத்தகம்" என்ற தலைப்புக் கொடுக்கப்பட்ட ஐந்தாம் புத்தகத்துக்குள் நுழைகிறோம். இதற்கும் புராணக் கதை மஹாபாரதத்திற்கும் சிறிதும் தொடர்பில்லை.

இதில் வரும் மூன்று அத்தியாயங்களும், சத்தியவான்– சாவித்ரி ஒருவரை ஒருவர் சந்திப்பதும், இருவரும் முன்பே ஆன்மாவால் பரிச்சயமானவர்களாய் இருப்பதை உணர்வதும், இவர்கள் திருமணத்தை விவரிப்பதுமாய் இருக்கின்றன. ஸ்ரீஅரவிந்தர் இந்தக் காவியத்தில் வேறு எதுவுமே எழுதாமல் இந்த மூன்று அத்தியாயங்களை மட்டுமே எழுதியிருந்தால்கூட மிகவும் எழில் வாய்ந்த அரிய கவிதையை எழுதிய சீரிய கவிஞராக இருந்திருப்பார். மிக மிக மென்மையானதும், மிகுந்த தூய்மையும் கூடிய இந்த மனித அன்பு எமனைத் திக்குமுக்காட வைக்கிறது. சாவித்ரி சத்தியவான்பால் கொண்ட தூய அன்பை எமனால் வெல்ல முடியவில்லை. பூரணமான அந்த அன்பு எமனுக்கே சந்தோஷத்தை அளிக்கிறது. அந்தத் தூய அன்பு அளித்த சந்தோஷத்தில் எமன் சாவித்ரியிடம் சத்தியவானைத் திருப்பித் தருகிறான். உலக இலக்கியத்திலேயே இந்த மூன்று அத்தியாயங்களுக்கு இணையானது எதுவுமே இல்லை. உண்மையிலேயே சாவித்ரி "ஒரு மேன்மை பொருந்திய தூய அன்பின்" கவிதையாகும்.

என்னால் இந்த இடத்தில் சாவித்ரியில் இவற்றைக் குறிக்கும் சில வரிகளைப் படிக்காமல் மேலே செல்ல இயலவில்லை. சாவித்ரியும் –சத்தியவானும் முதல் முறையாகச் சந்திப்பதைப் பார்ப்போம்.

*And Satyavan looked out from his soul's doors*
*And felt the enchantment of her liquid voice*
*Fill his youth's purple ambiance and endured*
*The haunting miracle of a perfect face.*
*Mastered by the honey of a strange flower-mouth,*
*Drawn to soul-spaces opening round a brow,*
*He turned to the vision like a sea to the moon*
*And suffered a dream of beauty and of change,*
*Discovered the aureole round a mortal's head,*
*Adored a new divinity in things.*
*His self-bound nature foundered as in fire;*
*His life was taken into another's life.*

*(p. 396)*

சாவித்ரி சத்தியவானை வணங்கி மாலையிட்டு அவன் பாதங்களைத் தொட்டு நமஸ்கரிக்கிறாள். அப்பொழுது சத்தியவான் அவளை ஒருசேரக் கட்டித் தழுவி அணைக்கிறான். இதை ஸ்ரீஅரவிந்தரின் கவிதை வரிகளில் கண்டு களிப்போம்.

*He gathered all Savitri into his clasp.*
*Around her his embrace became the sign*
*Of a locked closeness through slow intimate years,*
*A first sweet summary of delight to come,*
*One brevity intense of all long life.*
*In a wide moment of two souls that meet*
*She felt her being flow into him as in waves*
*A river pours into a mighty sea....*
*To live in Him forever and know His joy,*
*Her consciousness was a wave of him alone*
*And all her separate self was lost in his.*
*As a starry heaven encircles happy earth,*
*He shut her into himself in a circle of bliss*
*And shut the world into himself and her.*
*A boundless isolation made them one;*
*He was aware of her enveloping him*
*And let her penetrate his very soul,*
*As in a world by the world's spirit filled,*
*As the mortal wakes into Eternity,*
*As the finite opens to the Infinite.*
*Thus were they in each other lost awhile,*
*Then drawing back from their long ecstasy's trance*
*Came into a new self and a new world.*
*Each now was a part of the other's unity.*

(p. 40)

இப்பொழுது நாம் ஆறாம் புத்தகமாகிய விதியின் புத்தகத்திற்கு வந்து விட்டோம். இதில் இரண்டே அத்தியாயங்கள்தான் உள்ளன. முதல் அத்தியாயம் மானுட வாழ்க்கை நாடகத்தை நன்கு விரிவாய் சித்தரிக்கிறது. இரண்டாவது அத்தியாயம் உலகிலுள்ள அனைத்துத் தத்துவ ஞானிகளும் அலசிப் பார்க்கும் மனிதனின் பிரச்சினைகளையும், உலகிலுள்ள தீமைகளையும் கூறுகிறது.

மணமகளான சாவித்ரி விரைந்து தன் தந்தையின் இருப்பிடம் திரும்புகிறாள். தந்தை அஸ்வபதியிடம் தன் தேர்வையும், பிறவியின் நோக்கம் நிறைவடைந்து விட்டதையும் கூறுகிறாள். அப்பொழுது திரிலோக சஞ்சாரியான நாரதர் அஸ்வபதியின் இருப்பிடத்திற்கு வருகை தருகிறார். இதோ, சாவித்ரி தன் தேர்வைக் கூறுவதைக் கேளுங்கள்.

*The son of Dymathsena, Satyavan*
*I have met on the wild forest's lonely verge.*
*My father, I have chosen. This is done.*

*(p.431)*

சாவித்ரி சத்தியவானின் பெயரைச் சொல்லும் பொழுது திடீரென அவன் மீது ஒரு கரிய நிழல் படருவதையும், உடனேயே அது மிகப் பிரகாசமான ஓர் ஒளியால் விரட்டப்படுவதையும் அஸ்வபதி தன் திருஷ்டியில் காண்கிறார். சத்தியவானுக்கு எதுவும் நேராது, சாவித்ரியின் பிறப்பின் நோக்கம் கைகூடும் என்பதைத் தன் தீர்க்க தரிசனத்தால் அறிந்ததால் அவளது தேர்வுக்கு தன் ஒப்புதலைத் தந்து ஆதரவு அளிக்கிறார். அஸ்வபதிக்கும், நாரதருக்கும் இடையே நடந்த உரையாடல் சாவித்ரியின் தாய்க்கு, சாவித்ரியின் தேர்வு சரியானதல்ல என்ற சந்தேகத்தையும், மனக்கிலேசத்தையும் உண்டுபண்ணுகிறது. மிகுந்த மனவருத்தம் உண்டு பண்ணக்கூடிய ஒன்றை இவர்கள் தன்னிடமிருந்து மறைக்கிறார்கள் என்பதை உணர்ந்து, முக்காலமும் உணர்ந்த ஞானியான நாரதரிடம் உண்மையை

உரைக்கும்படி மன்றாடிக் கேட்கிறாள். நாரதரும் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், மிகுந்த ஆர்வத்துடன் சாவித்ரியும் சத்தியவானும் சந்தித்ததை சொர்க்கமும் பூலோகமும் இணைந்தது போல் அற்புதமாயிருந்தது என்று அழகாய் வர்ணிக்கிறார். அத்துடன் நில்லாமல் தொடர்ந்து, இன்னும் சரியாக ஒரு வருடத்தில் இதே நாளில் சத்தியவான் இறந்து விடுவான், அவனுடைய விதி அவ்வாறு உள்ளது என்றும் கூறி முடிக்கிறார்.

*Heaven's greatness came, but was too great to stay.*
*Twelve swift-winged months were given to him and her;*
*This day returning Satyavan must die.*

*(p. 431)*

ஒரு வருடம் கழித்து வரப் போவதை நாரதர் மூலம் முன் கூட்டியே அறிந்த சாவித்ரியின் தாய் மிகுந்த அல்லலுற்று சொல்லொணாத் துயரம் அடைகிறாள். இது இயற்கையே. தன் மகளின் மணாளன் திருமணமான ஒரே வருடத்தில் இறப்பதை எந்தத் தாயாலும் ஏற்க இயலாது. ஆதலால் சாவித்ரியின் தாய் சாவித்ரியிடம் மீண்டும் வேறு ஒருவரை மணாளனாகத் தேர்ந்தெடுக்கும்படி வற்புறுத்துகிறாள். ஆனால் சாவித்ரியோ தீர்மானித்து எடுத்த முடிவை மாற்றும் எண்ணம் சிறிதும் தன்னிடம் இல்லை என்று தாயிடம் கூறி உறுதியாக மறுத்து விடுகிறாள். சாவித்ரி எமனுக்கு எதிராக சவால் விட்டுக் கூறும் வார்த்தைகளில் காவியத்தில் முதல் முறையாக அவளுடைய வீரத்தின் வலிமையை நாம் காண்கிறோம். இறைவனின் இதயத்தில் எழுதப்பட்ட ஒப்பந்தம் இது என்பதை சாவித்ரி அறிவிக்கின்றாள். மனித இதயத்தில் இறைவன் மலர்ந்ததை தான் சத்தியவான் திருமுகத்தில் கண்டது சத்தியம் என்கிறாள்.

*Once my heart chose and chooses not again.*
*The word I have spoken can never be erased,*
*It is written in the record book of God. . .*
*My heart has sealed its troth to Satyavan:*
*Its signature adverse Fate cannot efface,*

*Its seal not Fate nor Death nor Time dissolve. . .*
*Let Fate do with me what she will or can;*
*I am stronger than death and greater than my fate;*
*My love shall outlast the world, doom falls from me*
*Helpless against my immortality. . .*

*(p. 432)*

*If for a year, that year is all my life*
*And yet I know this is not all my fate*
*Only to live and love awhile and die.*
*For I know now why my spirit came on earth*
*And who I am and who he is I love.*
*I have looked at him from my immortal self,*
*I have seen God smile at me in Satyavan;*
*I have seen the Eternal in a human face.*

*(p. 435-36)*

வேறு உதவியின்றி, மிகவும் குழப்பமடைந்த நிலையில் சாவித்ரியின் தாயார் தன் உள்ளத்து உணர்ச்சிகளை எல்லாம் நாரதரிடம் கொட்டித் தீர்க்கிறாள். சாவித்ரி செய்த பாவம்தான் என்ன? ஏன் இப்படி ஒரு பரிதாபமான செயல் அவளுக்கு நடக்க வேண்டும்? எண்ணிப் பன்னிரண்டே மாதங்களில் இறக்கப்போகும் சத்தியவான் மீது ஏன் சாவித்ரி அன்பு கொள்ள வேண்டும்? சாவித்ரிக்கு வேறு மணாளனே இல்லையா? இந்த உலகம் மிகவும் மோசமானதாக இருக்கிறது. இந்த உலகத்தில் துன்பத்தின் நிழல் இல்லாத இடமே இல்லையே. எங்கும் துன்பம் நிறைந்துள்ளது. கடவுள் எப்படி இவ்வளவு மோசமான உலகத்தைப் படைக்க முடியும்? கடவுள்தான் இப்படிப் படைத்தாரா? அல்லது கடவுளுக்குக் கட்டுப்படாத வேறு ஒரு சக்தி உலகை ஆட்டிப் படைக்கிறதா? துன்பங்களும், தீமைகளும், வேதனைகளும் மலிந்துள்ள இந்த உலகைப் பார்த்துக்கொண்டிருக்கும் கடவுள் கருணையற்றவரா? அவர் பாரபட்சமானவரா? என்றெல்லாம் புலம்புகிறாள்.

நாரதர் மிகவும் பொறுமையாக சாவித்ரியின் தாயாருக்கு வலியின்,

மனவேதனைகளின், துயரங்களின் இயற்கை நிலை என்ன என்பதையும், இறைவனின் நாடகத்தில் இவைகள் எவ்வாறு இடம் பெறுகின்றன என்பதையும் விவரமாக எடுத்துரைக்கிறார். மனிதன் அறியாமையின் பிடியில் சிக்கி இருக்கிறான். அவன் இறைவனின் ஒளிக்கு மறு பக்கத்தில், அதாவது இருட்டில் இருக்கிறான். அறியாமையிலிருந்து விடுபட்டால் இறைவனின் ஒளிமயமான பக்கம் அவனுக்குத் தெரிய வரும். துயரமும், வலியும் உணர்வின்மையிலிருந்து பிறப்பவை. அவை தங்களுடைய வேலைகளை இழைபிசகாமல் துல்லியமாகச் செய்கின்றன. துயரமும், வலியும் மனிதனை உணர்வு நிலைக்கு விழித்தெழச் செய்கின்றன. இவற்றை எதிர்க்கும் ஆற்றலைத் தருகின்றன. மனிதனின் பிரச்சினைகளை இந்தக் கண்ணோட்டத்திலேயே நாம் அணுக வேண்டும் என்று கூறுகிறார். இவற்றை விளக்கும் நாரதரின் வார்த்தைகளை சாவித்ரியில் பார்ப்போம்:

*Pain is the hammer of the gods to break*
*A dead resistance in the mortal's heart,*
*His slow inertia as of living stone.*
*If the heart were not forced to want and weep,*
*His soul would have lain down content, at ease,*
*And never thought to exceed the human start*
*And never learned to climb towards the Sun. . . .*
*Pain is the hand of Nature sculpturing men*
*To greatness: an inspired labour chisels*
*With heavenly cruelty, an unwilling mould. . . .*
*Although the shaping god's tremendous touch*
*Is torture unbearable to mortal nerves,*
*The fiery spirit grows in strength within*
*And feels a joy in every titan pang.*

*(p. 443-44)*

நாரதர் மேலும் சாவித்ரியின் தாயிடம் இவ்வாறு கூறுகிறார். மனித

வாழ்வில் துன்பம் தவிர்க்க இயலாதது. மனிதன் பரிணாமத்தில் வளர்ச்சி அடைய வேண்டும். துன்பம், வலி இவற்றின் மூலம் மனிதன் விழிப்படைந்து வாழ்க்கையில் முன்னேறுகிறான். கல்லில் மறைந்துள்ள சிலையை, சிற்பி உளியால் செதுக்கி அதன் அழகை வெளியே கொண்டு வருகிறான். சிற்பத்தையும், அதன் அழகையும் அப்பொழுதே நாம் அறிகிறோம். அது போல மனிதனில் மறைந்துள்ள தெய்வ அம்சமாகிய ஆன்மா இயற்கை எனும் கற்பாறையின் ஆழத்தில் புதைந்துள்ளது. மறைந்துள்ள ஆன்மாவை வெளியே கொண்டு வர வேண்டிய பணி ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனிட்ட பணி. இந்தப் பணியிலிருந்து மனிதன் தப்ப முடியாது. நிச்சயமாக ஒரு நாள் வரும், அப்பொழுது மனிதனுக்கு இந்த மோசமான கருவிகள் தேவைப்படமாட்டாது.

நாரதர் மேலும் விவரிக்கிறார். உலகைக் காப்பாற்ற வருபவர்கள் யாராயிருந்தாலும் ஏசுநாதரைப் போல் அவர்களும் உலகின் துயரங்களில் பங்கேற்க வேண்டும். உலகைக் காப்பாற்ற வந்த அந்த கடவுளின் தூதர், துயரங்களையும், தீமைகளையும் அவற்றின் பிறப்பிடத்திலேயே சந்தித்தார். அவற்றை இன்பங்களாயும், சந்தோஷங்களாயும் மாற்ற முயற்சித்தார். இதற்குக் கைமாறாக அவர் சிலுவையைச் சுமந்தார். பொன் மகுடம் சூட்டப்பட வேண்டிய சிரசில் உலகம் அவருக்கு சூட்டியது முட்க்ரீடமே.

*But when God's messenger comes to help the world*
*And lead the soul of earth to higher things,*
*He too must carry the yoke he came to unloose;*
*He too must bear the pang that he would heal:*
*Exempt and unafflicted by earth's fate,*
*How shall he cure the ills he never felt? . . .*
*The sorrow of all living things shall come*
*And knock at his doors and live within his house; . . .*
*The weeping of the centuries visits his eyes: . . .*
*The poison of the world has stained his throat. . . .*
*He dies that the world may be new-born and live. . . .*

*(p. 446-47)*

*Hard is the world–redeemer's heavy task;*
*The world itself becomes his adversary,*
*Those he would save are his antagonists:*
*This world is in love with its own ignorance,*
*Its darkness turns away from the saviour light,*
*It gives the cross in payment for the crown.*

*(p. 448)*

பிறகு அஸ்வபதி, நாரதரிடம் சாவித்ரி தன்னையும் காப்பாற்றிக் கொண்டு, உலகையும் காப்பாற்றுவாளா என்று வினவ, நாரதரும் ஆம், என்று பதிலளித்து அதற்கான பேராற்றல் அவளிடம் நிச்சயமாய் இருக்கிறது என்றும் கூறுகிறார். அவளுடைய பேராற்றல் அவளையும் உலகையும் மாற்றும் என்றும் கூறுகிறார். அவர் சாவித்ரியின் தாயாரிடம், சாவித்ரிக்கும் அவளுடைய விதிக்கும் இடையில் குறுக்கே நிற்க வேண்டாம் என்றும், அவள் அவளுடைய விதிக்குச் சமமான வல்லமை படைத்தவள் என்றும் கூறி தன் இருப்பிடம் நோக்கிச் செல்கிறார். சாவித்ரியின் ஆற்றல் பற்றி நாரதர் கூறுவதை சாவித்ரியில் பார்க்கலாம்:

*As a star, uncompanioned, moves in heaven*
*Unastonished by the immensities of Space,*
*Travelling infinity by its own light,*
*The great are strongest when they stand alone. . . .*
*A day may come when she must stand un helped*
*On a dangerous brink of the world's doom and hers,*
*Carrying the world's future on her lonely breast,*
*Carrying the human hope in a heart left sole*
*To conquer or fail on a last desperate verge, . . .*
*Cry not to heaven, for she alone can save.*
*For this the silent Force came missioned down,;*

*In her the conscious Will took human shape*
*She only can save herself and save the world.* *(p. 460-61)*



டாக்டர் மங்கேஷ் நட்கர்னி, மார்ச் 5, 2003ல்
சாவித்ரி பவனில் உரையாற்றும்பொழுது.

# வாழ்வின் அடிப்படைத் தத்துவம்

(Basic Philosophy of Life)

*ஸ்ரீஅன்னை, ஸ்ரீஅரவிந்தரின் கூற்றுக்கள்*

ஒரு முழு நிறைவை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதே மனிதனின் இலக்காக இருக்கிறது. அந்த முழு நிறைவை நோக்கி வளர்வதற்கான செயற்கூடமாக வாழ்க்கை அவனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அவனுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒரே பாதை, தன் வாழ்வையும், தன் செயல்களையும் முழுவதுமாய் இறைவனிடம் ஒப்படைப்பதே ஆகும்.

ஸ்ரீஅரவிந்தரின் சாதனை உலகை விலக்கி வைத்த சாதனை அன்று. மாறாக உலகமே பூரண திருவுருமாற்றத்தை விரும்பி அதற்காக மேலேயுள்ள தெய்வீக உணர்வை பூமிக்கு இறங்கி வரும்படி வேண்டுவதாக இருக்கிறது.

இதை மனிதனின் முயற்சியால் மாத்திரமே செய்ய இயலாது. கீழேயிருந்து மனிதன் ஆர்வமுற வேண்டும். அந்த ஆர்வத்திற்கு மேலேயிருந்து மறுமொழி கிடைக்க வேண்டும். பூமியிலிருந்து மனிதனின் ஆர்வமும், மேலிருந்து வரும் தெய்வீக அருளும், இரண்டும் இணைந்து செயல்படும் பொழுதே உலகத் திருவுருமாற்றம் நடைபெற முடியும்.

பொருளால் ஆன இந்த வாழ்க்கையை, மனிதன் மனதால் தீர்மானித்து, திட்டமிட்டு செயல்படுத்த விழைகிறான். ஆனால் உலகில் மனிதனுடைய வாழ்க்கை முழுமையாய் இல்லாமல் குறையுடையதாய் இருப்பதால் அவனுடைய திட்டங்களை அவன் நினைத்தபடி செயல்படுத்த முடிவதில்லை. உலக வாழ்க்கை அவன் திட்டங்களுக்குச் சவால் விடுகிறது. அரசியல் கருத்துக்களாலோ,

மதக்கோட்பாடுகளாலோ, தத்துவ வழிகளாலோ, அறிவால் புரிந்து கொள்வதாலோ, நீதி வழி நடப்பதாலோ அல்லது விஞ்ஞானக் கண்டுபிடிப்பாலோ மனிதன் தான் விரும்பிய முழுமையை அடைய முடியாது. மனிதன் தன் சுபாவத்தை மாற்றிக் கொள்ள முன் வர வேண்டும். அவ்வாறு மனிதன் தன் சுபாவத்தை மாற்றிக் கொள்ளும்பொழுது அவனுடைய ஒவ்வொரு செயலும் அவன் அடைய விரும்பும் முழு நிறைவுக்கு அவனை எடுத்துச்செல்லும்.

அப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. என்ன மனிதன் தன் சுபாவம் மாறும் நேரம் வரும்வரை, விரல்களோடு விளையாடிக் கொண்டிருந்து வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா என்று. இல்லை, இல்லை. அப்படி இல்லவே இல்லை. அவன் தன் சுபாவத்தை மாற்றிக் கொள்வதற்கு முதல்படியாக அவன் செய்ய வேண்டிய வேலை ஒன்று இருக்கிறது. தான் அறிந்த இந்த உண்மையை தன் மனமும், வாழ்வும் ஏற்றுக் கொள்ளும்படிச் செய்வதே அந்த வேலை ஆகும். இந்த உண்மையை நிதர்சனமாகக் கொண்டு தன் ஜீவனின் எல்லாப் பகுதிகளையும் வளரச் செய்ய வேண்டும். (உடல், உணர்வு, மனம், ஆன்மா). அவனுடைய ஆர்வம் அவனுள் 'ஜ்வாலையாக' எரிந்தபடி இருக்க வேண்டும். அவன் முழுவதுமாய் தெய்வீக அருளில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

ஒருவன் தன் சுபாவம், திறமை, தன் விருப்பம் இவற்றால் தன்னுடைய வேலைகளைத் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் அவன் அகத்தில் உள்ள நேர்மையை அவனுடைய வேலைகள் வெளிப்படுத்திக் காட்டும். ஆதலால் ஒருவன் தன்னுடைய வேலைகளைத் திறம்படச் செய்ய முயற்சிக்க வேண்டும் என்பது முக்கியமானதாகிறது. இதைக் கருத்தில் கொண்டு ஒருவன் தன் வேலைகளைச் செய்யும்பொழுது அவன் செய்யும் எந்த வேலையையும் அவனால் நேர்த்தியாய் அழகாய்ச் செய்ய முடியும்.

வேலையில் ஏற்றத் தாழ்வு என்பது இல்லை. வேலை மனிதனை உயர்த்துவதோ தாழ்த்துவதோ இல்லை. மனிதனே தன் வேலையில் ஏற்றத் தாழ்வை உண்டாக்குகிறான். ஒருவன் நேர்மையோடு ஒரு வேலையைச் செய்தால் (அது எந்த வேலையாக இருந்தாலும்

சரி ) அவன் அந்த வேலை மூலம் முழு நிறைவை நோக்கிச் செல்கிறான்.

ஒருவன் தன் வாழ்வில் புறத்தில் மாற்றிக் கொள்ள வேண்டியவைகள் அவ்வளவாக இல்லை. மாற வேண்டியவைகள் உள்ளேதான் இருக்கின்றன. முதலில் ஒருவன் வாழ்க்கையில் தன் மனப்பாங்கை மாற்றிக் கொள்ள வேண்டும். மாறின மனப்பாங்கு அவனுக்குத் தேவையான பிறவற்றைச் செய்துவிடும்.

ஒருவன் தன்னுள்ளே இருக்கும் 'மெய்மையை' கண்டறிய வேண்டும். பிறகு வாழ்க்கை பூராவும் அது அவனை வழி நடத்திச் செல்ல அனுமதிக்க வேண்டும்.

இது எளிதான பாதை அன்று. ஒவ்வொரு அடியும் ஆபத்தும், இடர் நிறைந்ததுமாகும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் அவனுடைய நேர்மையை பரிசோதிப்பதாக இருக்கும். ஆனால் இதைத் தவிர வேறு வழியே இல்லை.

# சாவித்ரி பவன் - செய்திகள்:

2004, நவம்பர் 21—ஆம் தேதியன்று அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட சாவித்ரிபவனின் புதிய கூடத்தில், டிசம்பர் 5—ஆம் தேதியன்று முதல் நிகழ்ச்சி நடந்தேறியது. அரவிந்தரின் மஹா சமாதி நாளான அன்று மதியம் 3.30 மணியளவில், 'ஸ்ரீஅரவிந்தரை நினைவு கூறுதல்' நிகழ்ச்சி மூலமாக நாங்கள் அனைவரும் ஒன்று கூடினோம். ஸ்ரீ அரவிந்தர் பௌதீக உடலில் இருந்த பொழுது அவருடன் கூடி இருக்கும் பாக்கியம் பெற்ற பல சாதகர்கள் அன்று எங்களுடன் இருந்து, ஸ்ரீஅரவிந்தருடன் தாங்கள் இருக்கும்பொழுது தங்களுக்குக் கிடைத்த அனுபவங்களை எங்களோடு பகிர்ந்து கொண்டு எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர்.

ஸ்ரீமதி கௌரி—பிந்தோ அன்று முக்கியப் பேச்சாளராக இருந்தார். இவர் 'கௌரி—தீ' என்று எல்லோராலும் பாசமாக அழைக்கப்படுபவர். தற்சமயம் ஆஸ்ரமப் பள்ளியில் ஆசிரியையாக இருப்பவர். இவருடைய பெற்றோர்கள் ஆசிரமத்தில் சேருவதற்கு ஒரு வருடம்



ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி கௌரி பிந்தோ உரையாற்றுகிறார். உடன் இருப்பவர்கள் டாக்டர் பீனா நாயக், திரு. வரதராஜன்.

முன்பு பிறந்தவர். இவர் ஸ்ரீஅன்னை, பரமப்பிரபு ஸ்ரீஅரவிந்தர் – இவர்களின் ஆசிகளை, தன் அன்னையின் கருப்பையில் இருக்கும் பொழுதே பெற்ற மா பாக்கியசாலி ஆவார். இவர் டிசம்பர் 5–ஆம் தேதியன்று தன் இளமைக் காலத்து அனுபவங்களை, மலரும் நினைவுகளாக நம்முடன் மகிழ்ச்சியாகப் பகிர்ந்து கொண்டார். அத்துடன் நில்லாமல் தன்னுடைய தந்தையும், ஆஸ்ரமத்தின் மூத்த சாதகருமான உதார்–பிந்தோ அவர்கள் இருந்த பொழுது நடந்த நிகழ்ச்சிகளையும், 'கடந்த கால நிகழ்ச்சிகளாய்' நம்முடன் பகிர்ந்து கொண்டார். அன்று செவிக்குணவாக இன்னிசைக் கச்சேரியும், விழிக்கு விருந்தாக அருள்வழிப் பள்ளிக் குழந்தைகள் நடத்திய நாட்டிய நாடகமும் நன்றாக அமைந்திருந்தன. எங்களிடையே அன்று எங்களது சகோதரரும், ஆரோவில் மூத்த குடிமகனுமான ச.மஹாலிங்கம் அவர்களும் உடனிருந்து உரையாற்றினார். இந்தச் சிறப்பான நேரத்தில் செங்கல்பட்டு மையச் சகோதர, சகோதரிகள் எங்களுடன் இருந்தது மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

இப்பொழுது சாவித்ரிபவனின் ஓர் அங்கத்தினராகவே ஆகிவிட்ட திருமதி. பிரேமா நந்தகுமார் டிசம்பர் 14 அன்று சாவித்ரிபவனுக்கு வருகை தந்து, தொன்றுதொட்டு வரும் பாரம்பரிய புராணக்கதை சாவித்ரியை பலவகையான கதை வடிவங்களில் இயம்பி எங்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்தார். அன்று அவர் ஆற்றிய சொற்பொழிவு இந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் புதுமையான மலர் அலங்காரக் கண்காட்சி ஒன்று புதிய கூடத்தில் நடைபெற்றது. தினமும் ஆரோவில்லைச் சுற்றியிருந்த இடங்களிலிருந்து பல வகையான மலர்களைச் சேகரித்து அவற்றை மாத்ரி மந்திர் பூங்காவனத்திற்குக் கொண்டுவந்தோம். அங்கு ஆரோகல்சர் குழுவினர் அம்மலர்களை அழகுற அலங்கரித்தனர். பின்னர் உதிர்ந்த மலர்களை புதிய நவீன முறையைக் கையாண்டு நன்கு பதப்படுத்தி. ஓம், தாமரை போன்று வடிவமைத்து, அம்மலர்களில் உணர்வினைச் செலுத்தி அதை ஸ்ரீஅன்னைக்கு அர்ப்பணித்தனர். இதோ இந்த மலர்கள் இப்பொழுது மாத்ரிமந்திர்

தோட்டங்களில் வளருவதற்குத் தயாராகிவிட்டன. பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த கிறிஸ்டியானா இந்த மலர் அலங்காரங்களை அழகாக தன் காமிராவில் சிறைப்படுத்தி அனைவரும் கண்டு களிக்கும்படி, சாவித்ரிபவன் குழுவினருடன் புதிய கூடத்தில் புகைப்படக் கண்காட்சியாக அமைத்தார். இந்தப் புகைப்படங்களை விற்பனைப் பிரிவில் வைத்து அந்தத் தொகையை ஆரோவில் நிலம் வாங்கும் பிரிவுக்கு அளித்தனர்.

பிப்ரவரி மாதத்தில் லோரட்டா அவர்களால், ஸ்ரீஅன்னையின் அரிய புகைப் படங்கள் கொண்ட கண்காட்சி ஒன்று நடை பெறவுள்ளது. 'ஸ்ரீ அன்னையின் புன்னகை' என்று அழைக்கப்படும் இந்தக் கண்காட்சி பிப்ரவரி 11 முதல் 28 வரை நடக்கும்.

இந்தக் காலகட்டங்களில் வழக்கம் போல் வகுப்புகள், பயிற்சிகள் நடைபெறும். அன்பார்ந்த வாசகர்களே, நிகழ்ச்சிகள் நடக்கையில் தாங்கள் ஆரோவில், பாண்டியில் இருந்தால் 'வருக வருக' வென்று தங்களை அன்போடும் மகிழ்ச்சியோடும் வரவேற்கிறோம்.



டாக்டர் பிரேமா நந்தகுமார், திரு வரதராஜன், திரு. எஸ். மகாலிங்கம், 14–12–2004 அன்று

## சாவித்ரி பவன் எனும் கனவு

ஆரோவிலில் ஒரு சூழலை பற்றிய எங்கள் கனவு அது

சாவித்ரியே அதன் மூச்சு.

உலகின் அனைத்து பாகங்களில் இருந்து வரும் சாவித்ரி அன்பர்களை அது வரவேற்கும்.

சாவித்ரி ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் மையமாக அது விளங்கும்.

ஸ்ரீஅரவிந்தரின் சத்யப் பெருவெளிப்பாடான சாவித்ரி எனும் மகாகாவியத்தை அனுபவிக்க, புரிந்து கொள்ளத் தேவையான அனைத்து உபகரணங்களையும் செயல்பாடுகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

சூரியனிடமிருந்து வெளிப்பட்ட உண்மை எனப்படும் சாவித்ரி பரிமளிக்கும் பவனமாகும்.

# நீங்கள் உதவ விரும்பினால்

## நீங்கள் இந்தியாவில் வசிப்பவரானால்:

உங்கள் சொந்த வரைவோலைகள் (Cheque) அல்லது கேட்புவரைவோலைகளை (D.D.) - S.A.I.I.E.R என்று குறிப்பிட்டு கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**சாவித்ரி பவன்**
ஆரோவில் 605 101
தமிழ்நாடு

பணவிடைகள் (M.O.) நேரடியாக "சாவித்ரி பவன்" என்ற பெயருக்கே எங்களின் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.

சாவித்ரி பவனிற்கு பண உதவி செய்யும் இந்திய நன்கொடையாளர்களுக்கு, வருமானவரி சட்டத்தின் பிரிவு 35(1) (III) - ன் படி 100% வரி விலக்கு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## மேலும் விபரங்களுக்கு, தொடர்பு கொள்க:

சாவித்ரி பவன்
ஆரோவில் 605 101
தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி: 0091 (0)413 2622922
மின்அஞ்சல்: savitribhavan@auroville.org.in
www.auroville.org/index/savitribhavan.htm

“சாவித்ரி
உலகின்
திருஉருமாற்றத்திற்கான
மந்திரம்”

ஸ்ரீஅன்னை